## ஒபெக் நிதியளிக்கப்பட்ட ஏ017 வீதி நடைபாதையின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் (ரக்வான – சூரியகந்த) செயற்திட்டம் - 2021

ஒபெக் நிதியளிக்கப்பட்ட ஏ017 வீதி நடைபாதையின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் (ரக்வான – சூரியகந்த) செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச்செயற்திட்டமானது 2019 சனவரி 01 இல் நடாத்தப்பட்ட அமைச்சரவை அமைச்சர்களின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் தகவல்களின் பிரகாரம், நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. சப்ரகமுவ மாகாணத்தில் ரக்வானயில் ஆரம்பிக்கும் 130.6 கி.மீ மற்றும் சூரியகந்தையில் முடிவடையும் 112.6 கி.மீ இலங்கையிலுள்ள ஏ017 வீதி நடைபாதையின் 18 கி.மீகளை புனரமைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். பொருளாதார நடவடிக்கையை ஊக்குவிக்க எதிர்பார்த்து இணைப்பு மற்றும் அணுகுமுறையினை மேம்டுத்தல் மற்றும் இலங்கையில் பொது சமுக-பொருளாதார அபிவிருத்திக்கு பங்களித்தல் என்பன செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த குறிக்கோளாகும். நடைபாதையானது இரண்டு பக்கங்களிளும் கடினமான மற்றும் மிருதுவன சவுல்டர்களுடன் (shoulders) ஓர் இரண்டு பக்க நெடுஞ்சாலையாக (10.0எம்) வடிவமைக்கப்படும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,947.2 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 50.54 மில்லியனானதுடன் அதில் ரூபா 5,497.9 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. கடன் உடன்படிக்கையானது 2019 ஒக்தொம்பர் 30 இல் கையொப்பமிடப்பட்டு 2023 செப்தம்பர் 30 இல் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும் செயற்திட்டத்தின் சிவில் நிர்மான வேலைகள் 2022 ஜுன் 30 இல் உள்ளவாறு கூட ஆரம்பித்திருக்கவில்லை.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம்

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தகவல்களின் பிரகாரம் செயற்திட்டமானது 3 ஒப்பந்தப்பொதிகளின் கீழ் சீஎச் 112+600 கி.மீ தொடக்கம் சீஎச் 130+600 வரையான 18 கி.மீகளின் வீதிபுனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க திட்டமிட்டிருந்தது. இருப்பினும் 3 ஒப்பந்தப்பொதிகளினதும் ஒப்பந்த கையளிப்பு நடவடிக்கைகள் செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கைகளில் தாமதம் காரணமாக 2022 ஜூன் 30 இல் உள்ளவாறு கூட பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். பிஎம்யு வானது அதற்கான கடன் வழங்குனர் ஒப்புதலினை பெற்றதன் பின்னர் பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது. இருப்பினும் பெறுகை நடவடிக்கைகளிற்கான கடன்வழங்குனர் ஒப்புதலினை பெற்றுக்கொள்வதன் மீது ஓர் கடுமையான தாமதம் இருந்தது. அது பிஎம்யு வின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றது. | மேலும் தாமதங்கள் இன்றி சிவில் நிர்மான வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தேசிய பாதீட்டின் தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மூலதன செலவினங்களிற்கான ஜிஓஎஸ்எல் ஒதுக்கீடு ரூபா 33 மில்லியனில் 18 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 5.97 மில்லியன் மாத்திரமே செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. | உடன்பட்டனர். பிஎம்யு வானது 2022 ஆம் ஆண்டின் 1வது காலாண்டின் போது செயற்திட்டத்தினை ஆரம்பிக்க திட்டமிட்டிருந்தும் ஆரம்பிப்பு திகதியானது கடன் வழங்குனர் ஒப்புதல் கிடைக்கப்பெறுவதில் தாமதம் காரணமாக தாமதமடைந்நிருந்ததுடன் ஒதுக்கிடப்பட்ட தொகைகளின் செலவுகளினையும் குறைத்திருந்தது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஒதுக்கிடப்பட்ட வளங்களை வினைத்திறனாக பயன்படுத்த முறையாக திட்டமிடப்படல் வேண்டும். |

## 2.2 செயற்திட்ட நடவடிக்கைகளின் ஆரம்பிப்புக்களில் தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| இலங்கை அரசாங்கமானது 2019 ஆம் ஆண்டில் ஏ017 வீதி நடைபாதை செயற்திட்டத்தின் (சூரியகந்த – ரக்வான) 18 கி.மீ நீளத்தின் புனரமைப்பு கிரயம் சார்பாக சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியளிப்பிடமிருந்து (ஒபிட்) ஐ.அ.டொலர் 40 மில்லியன் தொகையான ஓர் கடன் பெறப்பட்டிருந்தும், செயற்திட்டத்தின் நிர்மான நடவடிக்கைகள் கடன் உடன்படிக்கை திகதியிலிருந்து 3 வருடங்கள் கடந்த பின்னர் கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபெறாக செயற்திட்டத்தின் கடன் வசதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் 2 வருடங்களிற்கு மேலாக பயனற்றதாக இருந்தது. மேலும் கடன் வசதிகள் 2023 செப்டம்பர் 30 இல் முடிவடைய பட்டியலிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். பெறுகை நடவடிக்கைகள் 2020 சனவரி மாத காலத்தின் போது செயற்திட்டத்திற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அரசாங்கமானது 2020.05.18 இல் கோவிட் 19 அவசர உதவி நடவடிக்கைகளிற்கு கடன் தொகையினை பயன்படுத்த தீர்மானித்திருந்தது. இருப்பினும் கடன் வழங்குனர் மேற்கூறிய வேண்டுகோளிற்கு இணங்கியிராததுடன் அதனடிப்படையில் வெளிவளங்கள் திணைக்களமானது (ஈஆர்டி) அவ்வேண்டுகோளினை அவமதிப்பு செய்ய கடன்வழங்குனரிற்கு அறிவித்து 2021.02.22 இல் உண்மையாக மும்மொழியப்பட்ட வீதி மேம்படுத்தல் வேலையினை அமுல்படுத்த தீர்மானித்திருந்தது. அதன்படி பீஎம்யூ வானது பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இருப்பினும் இந்நிலமை காரணமாக காணி சுவீகரிப்பு மற்றும் ஏனைய முகவர்களிடமிருந்தான அனுமதி போன்ற ஏனைய நடவடிக்கைகள் மெதுவான முறையில் செய்யப்பட்டிருந்தது. | மொத்த கடன் வசதிகளினையும் 2023 செப்டம்பர் 30 இல் கடன் வசதிகள் காலாவதியாவதற்கு முன்னர் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.3 காணி சவிகரிப்புடன் தொடர்புடய விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் ஒப்பந்தபொதி – 1 இன் நிர்மானத்திற்காக 736 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. செயற்திட்டமானது 227 காணித்துண்டுகளிற்கு மாத்திரமே பிரிவு 38(அ) இனை வழங்கியிருந்ததுடன் எவ்வித இழப்பீடுகளும் பிரிவு 17 இன் கீழ் எவ்வித காணித்துண்டுகளிற்கும் | காணி சுவீகரிப்பு கொலொன்ன (112.6 கி.மீ - 118.1 கி.மீ) மற்றும் கொடகாவல (118.1 கி.மீ - 130.6 கி.மீ) எனப்பெயரிடப்பட்ட இரண்டு பிரதேச செயலகங்களின் கீழ் செய்யப்படுகின்றது. காணி சுவீகரிப்பு பிரதேச செயலகம், நிலஅளவை திணைக்களம் மற்றும் மதிப்பீட்டு திணைக்களம் எனப்பெயரிடப்பட்ட மூன்று அரச நிறுவனங்களின் பங்களிப்புடன் செய்யப்படுகின்றது. நாட்டின் | ஓர் உடன்பட்ட நேரத்தில் ஒப்பந்ததாரரிற்கு தள நிலமையினை கையளிக்க முடியுமானவகையில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

மதிப்பிட்டிருக்கவில்லை. மேலும் காணி சுவீகரிப்பின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மாத்திரமே 2022 ஜூன் 30 இல் உள்ளவாறு ஏனைய இரண்டு ஒப்பந்தபொதிகளின் நிர்மானத்திற்காக செயற்திட்டத்தினால் செய்யப்பட்டிருந்தது. எனவே வீதி நிர்மான வேலைகளை ஆரம்பிப்பதற்கு உரிய ஒப்பந்ததாரரிற்கு தள நிலமையினை கையளிப்பது சாத்தியமற்றதாகும்.

தற்போதைய நிலமை காரணமாக சுவீகரிப்பு செயன்முறையில் ஓர் தாமதம் காணப்படுகின்றது. இருப்பினும் கொடகாவெல டீஎஸ் பிரிவின் கீழான வீதிப்பிரிவிற்கான பிரிவு 38(அ) வர்தமானி அறிவிப்பு 2021.07.25 இல் வெளியிடப்பட்டிருந்தது.